# தகவல் தொழில்நுட்பப் பணியாளர்கள் பிரிவு

**சூன் 2019**

திபி 2050 . மலர் 1 . இதழ் 3



# பதிப்புரை

## இவ்விதழில்


1. இந்திய மக்களவைத் தேர்தலும் நாம் தமிழர் கட்சியும்
2. விருந்தினர் பக்கம்
3. சிரியாவும் காவிரியும்
4. தமிழரின் மறந்து போன பண்பாட்டு விளையாட்டுக்கள்
5. எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள் - கவிதை


“மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு, அவர்களது கஷ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவது தான் உண்மையான அரசியல் வேலை."

2019 பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. 3.87% வாக்குகள் பெற்று தமிழகத்திற்கான புதிய ஒளிக்கீற்றை நாம் தமிழர் காட்டியுள்ளது. அயராது உழைத்த வேட்பாளர்களுக்கும் களப்பணியாளர்களுக்குமே இவ்வெற்றி சேரும்.

தகவல் தொழில்நுட்பப் பிரிவுக்கு இத்தேர்தல் பெருஞ்சவலாக அமைந்தது. நாள்தோறும் புரளிகளும் அவதூறுகளும் நாம் தமிழர் பெயரில் பரப்பப்பட்டு வந்தன. வருகின்ற நாட்கள் எவ்வாறு அமையும் என்பதிற்கு இது எடுத்துக்காட்டு. முரசொலியும் விகடனும் நேரடியாக நம்மை விமர்சித்தன. நல்ல விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் நாம், தரம் குறைந்த விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கவும் தயங்கக் கூடாது. நாம் தமிழர் என்ற பெயரில் பிற கட்சி இயக்கங்களால் பரப்பப்பட்டு வரும் அவதூறுகளையும் இணங்கான வேண்டிய பொறுப்பும் உள்ளது.

நல்ல விடயங்களை மக்களிடம் கொண்டு செல்வோம். தமிழர் ஆட்சி மலரட்டும்.

வெல்லப்போறான் விவசாயி !

ஆசிரியர் குழு


## இந்திய மக்களவைத் தேர்தலும் நாம் தமிழர் கட்சியும்


ஒருவாறாக இந்திய பொதுத் தேர்தல் நடந்துமுடிந்துள்ளது. மத்தியிலும் மாநிலத்திலும் மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டபோதும் ஒன்றும் நிகழவில்லை.

தமிழகத்தில் நான்கு முனைப் போட்டி நடந்தது. 38 + 1 தொகுதிகளில் திமுக கூட்டணி 37 + 1 இல் வென்றுள்ளது.

நாம் கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளோம். நம் பெற்றுள்ள வாக்குகளை சற்று கூர்ந்து நோக்குவோம்.
நாம் தமிழர் மக்களவையில் தமிழகம் முழுவதும் பரவலாக வாக்கு பெற்றுள்ளது. இது தமிழகம் முழுவதும் நாம் தமிழர் சென்றடைந்துள்ளதைக் காட்டுகிறது.

"நாம் தமிழர் மக்களவையில் தமிழகம் முழுவதும் பரவலாக வாக்கு பெற்றுள்ளது. இது தமிழகம் முழுவதும் நாம் தமிழர் சென்றடைந்துள்ளதை காட்டுகிறது"






**வாக்குகள்**

அதிகபட்சமாக திருப்பெரும்புதூரில் 84979 வாக்குகளும், குறைந்தபட்சமாக கன்னியாகுமரியில் 17069 வாக்குகளும் பெற்றுள்ளோம்.

சதவிகித அடிப்படையில் அதிகபட்சமாக சிவகங்கையில் 6.66% வாக்கும், குறைந்தபட்சமாக தர்மபுரியில் 1.61% வாக்கும் பெற்றுள்ளோம்.

ஒட்டுமொத்தமாக 16 ,67,914 வாக்குகளும், 3.87% வாக்குகளும் பெற்றுள்ளோம். இது கிட்டத்தட்ட 2016 இல் பெற்றதைவிட 3 மடங்குக்கும் அதிகம்.

**இது எதிர்பார்த்ததா...?**

உண்மையில் நாம் எதிர்பார்த்ததைவிட குறைவுகாரணங்கள் என்னென்ன .?

**1. மோடி எதிர்ப்பு அலை**

தமிழகத்தில் கடுமையான மோடி எதிர்ப்பு அலை வீசியது. மத்தியில் மீண்டும் பாஜக வந்துவிடக் கூடாது என்ற எண்ணம் பரவலாக இருந்தது.

எனவே, பல நா த க ஆதரவாளர்கள் கூட மாற்றி வாக்களித்துள்ளனர் இது . போன்ற அலை கேரளாவிலும் நடந்துள்ளது.


கன்னியாகுமரி, தருமபுரி தொகுதிகளில் இதை நாம் நன்கு காண முடிந்துள்ளது.

**2. நகர்ப்புற வாக்கு சிதறடிப்பு**

நகர்ப்புற வாக்குகள் சிதறடிக்கப்பட்டிருக்கின்றன. இது நா த கட்சியைப் பாதித்துள்ளது. குறிப்பாக ம நீ ம நகர்ப்புறங்களில் வாக்கைப் பெற்றுள்ளது. ஊடக வெளிச்சம் முக்கிய காரணம்.

**ம நீ ம வுடன் நம்மை ஒப்பிடுவது சரியா…?**

இது திட்டமிட்டு நா த கட்சியைக் குறைத்து மதிப்பிடுவது.



ம நீ ம பெற்ற மொத்த வாக்குகள் எண்ணிக்கை 16,13,392. இது நாம் பெற்ற வாக்கைவிட 5,55,124 குறைவு.
மத்திய சென்னை, வட சென்னை, தென் சென்னை, மதுரை, கோவை, திரும்பெரும்புதூர் ஆகிய இடங்களில் மட்டுமே ம நீ ம பெருவாரியான வாக்கைப் பெற்றுள்ளது.

இத்தொகுதிகளில் மட்டும் ம நீ ம பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 696262. இது மொத்த வாக்குகளில் 43%.
இது தனிப்பட்ட நபர்களின் வலுவையேக் காட்டுகிறது.

நா த க அவ்வாறல்லாமல் பரவலாக வாக்குப் பெற்றுள்ளது. இது பரவலான செல்வாக்கைக் காட்டுகிறது.

**திமுக வலுப்பெற்றுள்ளதா...?**

திமுக பெருமளவில் மக்களவைத் தேர்தலில் வாக்குப் பெற்றுள்ளது. எனினும், சட்டமன்ற இடைத் தேர்தலில் அதே வாக்கைப் பெறமுடியவில்லை.
இது மக்களவை வாக்கிற்கு மோடி எதிர்ப்பு அலையே காரணமே அல்லாமல் திமுக ஆதரவு வாக்கு அல்ல.

**நாம் என்ன செய்ய வேண்டும்...?**

1. நாம் தமிழர் கருத்துகளை இன்னும் வேகமாக பரப்ப வேண்டும்.

2. திராவிட மற்றும் வலதுசாரி, சாதிய அமைப்புகள் நாம் தமிழர் மீது கடுமையான விமர்சனங்களை சமூக ஊடகங்களில் வைத்து வருகின்றன. இதனை நாம் முறையாகவும் அறிவுப் பூர்வமாகவும் எதிர்கொள்ள வேண்டும்.

3. நாம் தமிழரை பிற்போக்குத் தனமான கட்சியாகக் காண்பிக்க சிலர் முயன்று வருகின்றனர். தொழிற்களுக்கு எதிரானவராகக் காட்ட முயல்கின்றனர். இதனை முறியடிக்க வேண்டும். நகர்ப்புறம் சார்ந்த நம் திட்டங்களை அதிகமாகப்பரப்ப வேண்டும்.

4. நாம் தமிழரை பிற மொழிகளுக்கு எதிரானவர்போல சிலர் காட்ட முயற்சிகின்றனர். மிகக் கடுமையான வார்த்தைகளால் சில கட்சிப் பத்திரிக்கைகள் நம்மை விமர்சித்ததை வருகின்றன. நம் அடிப்படைக் கொள்கைகளைத் தெளிவாக மொழிச்

சிறுபான்மையினருக்கு உரைக்க வேண்டும்.

5. உலக அரசியல் , சுற்றுச்சூழல் அரசியல் அல்லாமல் , மக்களின் அன்றாட தேவைகளுக்குமான கொள்கைகளையும் பேச வேண்டும்.

வளமான தமிழகம் அமைப்போம்.

அறிவரன் பா

நமது சின்னம்

விவசாயி

**தங்களைப் பற்றி...**

என் சொந்த ஊர் ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி. 10 மாதத்திலேயே போலியோவால் பாதிக்கப்பட்டு அதனால் பள்ளிக்குச் செல்வதில் தடை ஏற்பட்டது. 19 வயது வரைக்கும் முறையான பள்ளியில் படிக்க வாய்ப்பு அமையவில்லை.

பின் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் சேர்ந்து இளங்கலை வரலாறு முடித்தேன். பின் மாநிலக் கல்லூரியில் சேர்ந்து முதுகலை எம்பில் முடித்தேன். 2011 ஆம் ஆண்டு தமிழக நாட்டுப்புற விளையாட்டுகள் ஒரு வரலாற்று பார்வை என்று ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றேன்.

**நாம் தமிழரில் எவ்வாறு இணைந்தீர்கள்...?**

2009 இல் மாநிலக் கல்லூரியில் ஆய்வு மாணவராக படித்துக் கொண்டிருக்கும் போது ஈழப்போர் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தது. அப்போது நான் மாநிலக் கல்லூரியின் மாணவர் மன்றத் தலைவராக இருந்தேன். ஈழ இன அழிப்புக்கெதிராக உண்ணாவிரதப் போராட்டம் இருந்துவந்தோம். சக நண்பர் ஒருவரின் மூலமாக நாம் தமிழர் இயக்கத்தின் அறிமுகம் கிடைத்தது. அப்போது மாநிலக் கல்லூரியின் சார்பாக நாம் தமிழர் இயக்கத்துடன் இணைந்து போராட்டத்தில் கலந்துகொண்டேன். 350 இக்கும் மேற்பட்ட மாணவர்கள் என்னுடன் அப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டோம்.அவ்வாறு நாம் தமிழருடன் என் பயணம் தொடங்கியது.

பின் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் பெயரைத் தமிழ்நாடு நடிகர் சங்கம் எனப் பெயர் மாற்றகோரி போராட்டத்தில் பங்கேற்றேன். அதில் நான் கைது செய்யப்பட்டேன்.

**கடந்த 10 வருடங்களில் நாம் தமிழரின் வளர்ச்சியை எவ்வாறு பார்க்கிறீர்கள்...?**

மிகச்சிறப்பாக உள்ளது. நாம் தமிழர் கட்சிக்கு பெரிய ஒரு ஊடக பலம் கிடையாது. கொள்கை பலம் மட்டுமே. வெற்றி தோல்வி என்பது இங்கு முக்கியம் கிடையாது.

எடுத்துக்காட்டாக, தென் சென்னை மக்களவை வேட்பாளர் அவர்கள் வேளச்சேரி ஏரி தூர்வாரும் பணியில் ஈடுபட்டதைப் பார்த்திருப்பீர்கள். அனைத்து உயிர்களுக்குமான அரசியலை பேசுகிறது நாம் தமிழர் கட்சி. வளர்ச்சி இன்னும் வரும் காலகட்டங்களில் அதிகமாக இருக்கும்.



**முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது...?**

நாம் தமிழர் இயக்கம், நாம் தமிழர் கட்சியாக உருவானபோது, கருத்தியல் முரண்பாடு காரணமாக சில காலம் விலகி இருக்க நேர்ந்தது. 2016 இல் தேர்தலில் முதுகுளத்தூர் தொகுதியில் போட்டியிடுமாறு அண்ணன் சீமான் அவர்கள் கேட்டுக் கொண்டார். நீண்ட யோசனைக்குப் பிறகு ஒத்துக் கொண்டேன்.

**நாம் தமிழர் கட்சி கடந்த மக்களவைத் தேர்தலில் பரவலாக வாக்கு வாங்கியுள்ளது. எனினும் நகரங்களில் பெரும் அளவில் வாங்க முடியவில்லை. நாம் தமிழர் கட்சியின் கருத்துகள் நகர மக்களைக் கவரும் வகையில் இல்லையா?**

அப்படி பார்க்க முடியாது. நகரங்களில் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். நாம் தமிழரை தமிழர்தான் ஆள வேண்டும் என்கிறோம். இதனை நாம் தமிழர் தூய இனவாதம் பேசுகிறது என்பதுபோல திரித்து பரப்பப்படுகிறது. இன்னும் கொஞ்சம் அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது. நாம் தமிழர் ஆட்சி அனைத்து மக்களுக்கு மட்டுமானதல்ல, ஒட்டுமொத்த உயிர்களுக்கானது.

**திராவிடக் கட்சிகள் தமிழ்தேசியவாதிகளை பார்ப்பன அடிவருடிகள் என்பதை எப்படி பார்க்கிறீர்கள்...?**

பார்ப்பனர்களில் பல பிரிவுகள் உண்டு. ஒன்றுக்கொன்று தொடர்பில்லை. திருமண உறவுகள் கிடையாது. பல்வேறு ஆய்வுகளின் மூலம் தமிழ் பார்ப்பனர்களும் உண்டு என்பதை அறிகிறோம். திராவிட இயக்கங்கள் பார்ப்பன எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை. பார்ப்பனர்களில் தமிழர்களும் உண்டு என்பதை திராவிட இயக்கங்கள் ஏற்க மறுக்கின்றன. நாம் அதில் தமிழர்களும் உண்டு, பிற மொழியினரும் உண்டு எனக் கூறுவது அவர்களது அடிப்படை அரசியலையே ஆட்டம் காண வைக்கிறது. இதனால், தமிழ்தேசியவாதிகளை எதிர்க்கிறார்கள்.

**தலித் இயக்கங்களும் தமிழ்தேசியவாதிகளை எதிர்க்கிறார்களே...**

தமிழகத்தில் நாயக்கர்களின் ஆட்சிக்குப் பின்தான் சாதிய வன்மம் வந்ததது. அதுவரை தொழிற்முறையான பட்டங்கள் மட்டுமே இருந்தன. ஏற்றத்தாழ்வுகள் இல்லை. மறையோன் என்பதிலிருந்து வந்தது பறையோன். வேளாண்மையில் இருந்து பள்ளன் வந்தது. தற்போது சில இந்திய இயக்கங்கள் சாதியத்தின் மூலம் வாக்கு வாங்க முயல்கின்றன.

யாதவ், தலித் என்பன போன்ற அடையாளங்களை கலாச்சாரம் கடந்து கட்டமைக்க முயல்கின்றன. அவை தான் தமிழ்தேசியவாதிகளை எதிர்க்கின்றன. மக்களை குழப்புற வேலைகளை இந்த அமைப்புகள் செஞ்சுகிட்டு இருக்காங்க.

**மிக நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழகத்தில் கொள்கை ரீதியான அரசியல் எழுந்துவருகிறது. இந்நிலையில் நடிகர்களின் அரசியல் வருகையை எப்படிப் பார்க்கிறீர்கள்...?**

நடிகர்கள் உடைய மோகம் வந்து அதிகமாக தான் இருக்கிறது.

மது மாது சினிமா ஆகிய மூன்று விஷயங்களை வைத்து தமிழர்களை அடிமைப்படுத்துகிறார்கள்.

ஜெயலலிதா உயிரோடு இருக்கும்போது இவர்கள் ஏன் வரவில்லை? கொள்கையில்லாத இவர்களை மக்கள் புறக்கணிப்பார்கள்.

**தேர்தல் பிரச்சாரத்தின்போது நடந்த ஒரு சுவாரசியான நிகழ்வைச் சொல்லுங்களேன்...**

பொதுவாக நாங்க ஐந்துமணிக்கு ஆரம்பிக்கும் கூட்டம். ஒரு வயதானவர் முன்னே உட்கார்ந்து கேட்டுக் கொண்டு இருந்தார். கூட்டம் முடிந்ததும் பக்கத்தில் வந்து எங்கிட்ட பேசினார். அவர் அதிமுக மேடைப் பேச்சாளர். 'இப்போ இருக்குற அத்தனை அரசியல்வாதியும் ஏமாத்திட்டு இருக்காங்க. சுய லாபத்துக்காக தான் பண்றாங்க. மக்களுடைய நலனுக்கு எந்த விதமான திட்டம் இல்லை. ஆனால் சீமானுடைய பேச்சு எல்லாம் கேட்டா அது நல்லா இருக்குது.

இப்ப மக்களுக்கு உங்க மதிப்பு தெரியாது. அஞ்சு பத்து வருஷத்துல நீங்க மிகப்பெரிய வெற்றியை சந்திப்பீர்கள்' என சொல்லிட்டு போனார் அதுதான் இப்ப நடந்துட்டு இருக்கு.

**கடைசியாக... தகவல் தொழில்நுட்பப் பணியாளர் பிரிவு இன்னும் எவ்வெவ்வகையில் செயல்பட வேண்டும் என நினைக்கிறீர்கள்...?**


நாம் தமிழர் கட்சியை பொறுத்த வரை நமக்கு ஊடக வலிமை இல்லை. தகவல் தொழில்நுட்பம் மூலமாக மக்களை போய் சென்று அடைய வேண்டும். நம் கருத்தியலை சிறு சிறு காணொளிகளாக வெளியிட வேண்டும். மாற்றம் இங்கு வர தகவல் தொழில்நுட்பப் பிரிவு தீவிரமான செயல்பாடுகளில் இன்னும் அதிகமாக ஈடுபட வேண்டும். சுற்றுச்சூழல் பாசறை, லஞ்ச ஊழல் ஒழிப்பு பாசறை ஆகியவற்றை மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும். தேர்தலைக் கடந்து மக்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும்..

**பேட்டி எடுத்தவர் - அறிவரன் பா**

“நமது சிறப்பு விருந்தினர் பகுதியில் மாதம் ஒரு நாம் தமிழர் தோழரின் பேட்டி இடம்பெறும் நாம் தோழர்களை . அறிமுகப்படுத்தும் சிறிய முயற்சியாகும்"

# சிரியாவும் காவிரியும்

சிரியா மக்கள் ஐரோப்ப குடியேற்றத்தால் விளைந்த பிரச்சனைகளை நாம் அறிவோம். அதன் பின்னால் இருக்கும் முக்கிய காரணத்திற்கும் காவிரிக்கும் ஒரு தொடர்புண்டு.



கொஞ்சம் பின்னோக்கிச் சென்றால் , சிரியாவின் கதை, காரணம் புரியும் .

1975 களில் துருக்கி பெரும் அணைகளைக்கட்டத் துவங்கியது. ஈராக் 80% நீரையும், சிரியா 40% நீரையும் இழந்தன. இந்த நீரை ஈடுகட்ட விவசாயிகள் ஆழ்குழாயைப் பயன்படுத்தி விவசாயம் பார்க்கத் தொடங்கினர். நிலத்தடி நீர் வற்றிப்போனது.

சிரியா 2006 ஆம் ஆண்டிலிருந்து கடுமையான வறட்சி. குடிக்கவும் நீரில்லை. மக்கள் நீரைத் தேடி வயல்வெளிகளை விடுத்து நகரத்தை நோக்கி நகரத் துவங்கினர். வேலைவாய்ப்பின்மை அதிகரித்தது. அதிலிருந்து தொடங்கியதே சிரியாவின் இன்றைய நிலை.

இதே சூழ்நிலையில் தான் இன்று காவிரி உள்ளது. ஒருபுறம் காவிரி நீரும் வரவில்லை. இன்னொருபுறம் மிக அதிகமான ஆழ்குழாய் கிணறுகள். கடல்நீர் உட்புகுந்து பல இடங்களில் உப்பேறிப்போயுள்ளது.

ஒரு காலத்தில் வைகை டெல்டாவாக இருந்த இராமநாதபுரத்தின் நிலை இன்று நமக்குத் தெரியும்.

இப்போதும் நாம் விழித்துக்கொண்டு நம் நீர் மேலாண்மையை நாம் சரிசெய்யாவிட்டால், சிரியா போன்ற நிலையை நாம் அடையும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை கிராமங்களின் வீதிகளில் சிறுவர்களும், சிறுமியர்களும் கூட்டம் கூட்டமாய் கூடி விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

இன்றைக்கு தொலைக்காட்சிகளின் ஆக்கிரமிப்பு தவிர கல்வியில் போட்டி என்ற பெயரில் அளவிற்கு அதிகமான வீட்டுப்பாடங்களை திணிப்பனாலும் விளையாட்டு என்பதே குழந்தைகளுக்கு மறந்து விட்டது.

ஓடி ஆடி தெருக்களில் குழுவாக விளையாடியதை இனி கதைகளில் மட்டுமே படிக்க வேண்டும் போல ஏனென்றால் இன்றைய தலைமுறையினருக்கு விளையாட்டு என்றாலே அது கிரிக்கெட்தான் நினைவுக்கு வருகிறது.

அந்த அளவிற்கு கிரிக்கெட்டின் தாக்கம் அதிகரித்திருக்கிறது. மறந்து கொண்டிருக்கும் கிராமத்து விளையாட்டுக்களை நினைவுபடுத்தவே இந்த கட்டுரை.

கிராமத்து விளையாட்டுக்கள் வீட்டினுள் விளையாடுவது ஒரு வகை.

வீட்டிற்கு வெளியே சென்று ஆடுவது மற்றொன்று.

ஆடுபுலி ஆட்டம், கபடி, சல்லிக் கட்டு, உறியடி, வழுக்கு மரம், சிலம்பாட்டம், வண்டிப் பந்தயம். கால்தூக்கிக் கணக்குப் பிள்ளை, பந்து, பச்சைக் குதிரை, பம்பரம், புளியங் கொட்டை, கபடி, கள்ளன் போலீஸ் இவை சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான விளையாட்டு.

பல்லாங்குழி, தாயம், சில்லுக் கோடு, தட்டா மாலை, கும்மி, கோலாட்டம், பாண்டி, கண்ணா மூச்சி, பூசணிக்காய், குலைகுலையா முந்திரிக்காய், எலியும் பூனையும், ஒரு குடம் தண்ணி ஊத்தி, பூப்பறிக்க வருகிறோம், கரகர வண்டி, சில்லுக் கோடு, கிச்சுக் கிச்சுத் தாம்பாளம், கொழுக்கட்டை, நொண்டி இவை சிறுமியர்கள் மற்றும் குமரிப்பெண்களுக்கான விளையாட்டு.

நாட்டுப்புறங்களில் 126 வகை விளையாட்டுக்கள் விளையாடப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் கண்ணாமூச்சி, உருண்டை திரண்டை, அந்தக் கழுதை இந்தக் கழுதை, கல்லுக் கொடுத்தான் கல்லே வா, ராஜா மந்திரி, பருப்புக் கடைந்து, அத்தளி புத்தளி, கில்லாப் பறண்டி, அக்கக்கா கிளி செத்துப்போச்சு, சீப்பு விக்கிது. தொட்டுப் பிடிச்சு, ஐஸ் பால்

போன்ற விளையாட்டுகள் ஒரே குழுவாக விளையாடும் விளையாட்டுகளாகும். இந்த விளையாட்டுகளில் தாய்ச்சி எனப்படும் தலைவர் ஒருவர் இடம் பெற்றிருப்பார். மெல்லவந்து மெல்லப்போ, பூச்சொல்லி போன்ற விளையாட்டுகளில் இரு உத்திதார் இருக்கிறார்கள். இவை அணி பிரிந்து விளையாடும் விளையாட்டுகள்.

குழுவாக பிரிந்து விளையாடும் சில விளையாட்டுக்களில் உத்திதாய்ச்சி எனப்படும் துணைத்தலைவர் இடம்பெற்றிருப்பார்.

கண்ணாமூச்சி கண்ணாமூச்சி விளையாட்டில் தலைவராக கருதப்படுபவர், குழுவில் இருந்து ஒருவரை தேர்ந்தெடுக்கிறார். அவரை பட்டவர் என்று கூறுகின்றனர். அவரது கண்ணினை, தலைவர்
மூடிக்கொள்ள, மற்ற குழந்தைகள், ஓடி ஒளிந்து கொள்வர். அவர்கள் ஓடி ஒளிந்து கொள்ளும் நேரத்தில் தலைவரானவர்

"கண்ணா மூச்சி ரேரே…

காரே முட்டே ரே ரே …

ஒருமுட்டையை தின்னுபுட்டு…. ஊளை முட்டைய கொண்டுவா …." என்று பாடுவார்.

பாடல் முடிந்தவுடன் தலைவர் அந்த நபரின் கண்களைத் திறந்து விடுவார். ஒளிந்திருக்கும் குழந்தைகளை அந்த நபர் தேடிக்கொண்டு போகும் போது அவரிடம் சிக்கியவர் அவுட்டாகிறார்.

இதன் பின்னர் அவுட்டான நபரின் கண்கள் மூடப்படும். மீண்டும் விளையாட்டு தொடரும். தேடும் நபரிடம் அகப்படாமல் குழந்தைகள் அனைவரும் தலைவரை தொட்டுவிட்டால் அவர்கள் பழமாவார்கள். இதுபோன்ற சுவாரஸ்யமான விளையாட்டுகளை எல்லாம் கிராமங்களில் காண
முடிவதில்லை என்பதுதான் வேதனை.

சிறுவர்களின் உலகத்தை இப்பொழுது கார்டூன் சேனல்களும், வீடியோ
விளையாட்டுக்களும், அலைபேசி விளையாட்டுக்களும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதால் நாட்டுப்புற விளையாட்டுக்களை இனி கதைகளில் மட்டுமே படிக்க வேண்டியிருக்கும் நிலை உருவாகியுள்ளது இதனை
நாம் தான் மாற்றியமைக்க வேண்டும்.

நமது பண்பாட்டு நாட்டுப்புற விளையாட்டுக்களை நாமே நமது
குழந்தைகளுக்கு கற்றுத்தர மறந்துவிட்டோம் என்பதே மறுக்க முடியாத உண்மை.

நமது மனநிலையை மாற்றிக்கொண்டு வருங்கால தலைமுறையினருக்கு அறிவுத்திறன், உடல்திறன் போன்றவற்றை மேம்படுத்தும் நமது விளையாட்டுக்களை கற்றுக்கொடுத்து நமது குழந்தைகளின் வளமான வாழ்க்கைக்கு வழிவகுப்போம்
என்று உறுதியெடுப்போம்.

விளையாட்டை வெறும் பொழுதுபோக்காக மட்டும் கருதாமல், மரபு சார்ந்த பண்பாட்டு கூறாக கருதவேண்டும்,

அவ்வாறு கருதினால் மட்டுமே தமிழரின் பண்பாட்டு விளையாட்டுக்களை மீட்டுருவாக்கம் செய்ய முடியும்..

**- முனைவர் சே. ப. முகம்மது கதாபி.**

“நமது பண்பாட்டு நாட்டுப்புற விளையாட்டுக்களை நாமே நமது

குழந்தைகளுக்கு கற்றுத்தர மறந்துவிட்டோம் என்பதே மறுக்க முடியாத உண்மை."



## சிறப்பு கட்டுரை

**முனைவர் சே. ப. முகம்மது கதாபி** அவர்கள் தமிழரின் பண்பாட்டு விளையாட்டுகள் என்ற தலைப்பில் தமிழர் பண்பாட்டு விளையாட்டுகளில் உள்ள உளவியல் மற்றும் உடல்நலக் கூறுகளை விரிவாக ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.
தமிழர் பண்பாட்டு விளையாட்டுகளைக் குழந்தைகளிடம் அவற்றை கொண்டு சேர்ப்பதன் மூலம் மனவளமும் உடல் வளமும் நிறைந்த சமூகத்தை உருவாக்க முடியும் என நிறுவியுள்ளார். தமிழர் பண்பாட்டு விளையாட்டுகளை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் பணியாற்றிவருகிறார்.

தொடர்புக்கு **eraiyanbu@gmail.com**

# மக்கள் களம்

மே 18 நினைவேந்தல்



மே 18 நினைவேந்தல்



மே 18 நினைவேந்தல்



மே 18 நினைவேந்தல்



வேளச்சேரி ஏரி புனரமைப்புப் பணி - சுற்றுச்சூழல் பாசறை | நாம் தமிழர் கட்சி
நாம் தமிழர் கட்சியின் சுற்றுச்சூழல் பாசறை , 2019 ஆம் ஆண்டிற்கான திட்டங்களில் ஒன்றான நீர்நிலைகள் புனரமைப்பை நாம் தமிழர் கட்சி - வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி உறவுகளுடன் இணைந்து , 09-06-2019, ஞாயிற்றுக்கிழமை வேளச்சேரி 100 அடி சாலை - வேளச்சேரி முதன்மைச் சாலைக்கு இடைப்பட்ட பகுதிக்குள் இருக்கும் ஏரியைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றது பிறகு மரக்கன்றுகள் நடப்பட்டது



தமிழர் நலம் மற்றும் தமிழ் மண் நலம் காக்க உறுதிமொழி ஏற்பு



மரக்கன்றுகள் நடுதல்



# எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்

வீரம்மா செல்லமகன்

எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்
உங்களை நம்பியே நாங்கள்
எமது மரபை இழந்தோம்
பழைமையை இழந்தோம்
நிம்மதி இழந்தோம்
மூச்சினை இழந்தோம்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,

நித்திரை இழந்தோம்
கலைகளை இழந்தோம்
தற்சார்பை இழந்தோம் - செழிப்பான
வளங்களை இழந்தோம்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,
உரிமை இழந்தோம்
உணர்வை இழந்தோம்
உணவையும் இழந்தோம் - இருந்தும்
கோபம் கடியோம்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,



இன உணர்வு அற்ற சடலம் - நாங்கள்
மொழி உணர்வு அற்ற பிண்டம்
சக உயிர்தனை கொன்ற போதும்
வேடிக்கைதானே பார்த்தோம்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,

" இன்னும் எவ்வளவு எத்தனை காலம்.."

அறியாமையின் உச்சம் - நாங்கள்
மடைமையின் உதாரணம்
எம்மை சுரண்டி கொழுத்தீர்கள்
அதிகாரத்தில் பணம் படைத்தீர்கள்
எமது குருதிதீர உழைத்த னவெல்லாம்
உங்கள் மாளிகையில் தோரணமாய் - ஆயினும்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,

எங்கள் வயலில் விளைந்தன வைகளுக்கு
உங்கள் கையில் விலைநிர்ணயம்
மானம் கடந்து அம்மணம் தரித்தோம்
எலிக்கறி உன்றோம் - இருந்தும்
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்,

இன்னும் எவ்வளவு தூரம்
எத்தனை காலம் - நாங்கள்
அடிமையாகவே இருக்க எத்தனிக்கிறீர்கள்
களவு செய்ததும் போதாதா
சொத்து குவித்ததும் போதாதா
உங்கள் பல தலைமுறை வாழ
பொருள் ஈட்டியும் நிறைவில்லையா



முன்னோர்கள் முறையாய் விட்டுச்சென்ற
இயற்கை வளங்களை காவுகொடுத்து
மண்ணை, மலையை, காட்டை, கடலினை
கபளீகரம் செய்து நீங்கள் எத்தனை காலம்
இன்னும் வாழ்ந்து விடமுடியும்?

கடல்பல கடந்து படைபல நடத்தி
பூமியின் பாதியை ஆண்ட - சோழனின்
துயிலிடமே ஆராய்ச்சிக்கு உட்படுகையில்
நீங்கள் எம்மாத்திரம்?
எங்களை ஏன் ஆள துடிக்கிறீர்கள்?